# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

| தரம் - 07 | சைவநெறி | நேரம் :- இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் :- ............................

## பகுதி I

❖ **மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. பாடசாலைகளில் விசேட வழிபாடுகள் நிகழ்த்தப்படும் நாள்.
   1) திங்கட்கிழமை 2) வெள்ளிக்கிழமை
   3) வியாழக் கிழமை 4) புதன்கிழமை

02. திருச்சிராப்பள்ளிக் குன்றுடையானின் திருநாமம்.
   1) கதிரவேல் சுவாமி 2) கடையிற்சுவாமி
   3) தாயுமான சுவாமி 4) முத்துக்குமார சுவாமி

03. மாணவர்களுக்கு கல்வியையும் ஒழுக்கத்தையும் போதிப்பதில் முக்கிய பங்கு வகிப்பது.
   1) வீடு 2) ஆலயம் 3) பாடசாலை 4) அலுவலகம்

04. "பணியுமாம் என்றும் பெருமை ..........." என்று கூறியவர்.
   1) பாரதியார் 2) ஔவையார் 3) திருவள்ளுவர் 4) ஆறுமுகநாவலர்.

05. வீடு ஒன்றைக் கட்டுவதற்கு தகுந்த இடத்தைத் தெரிதல், அத்திபாரமிடல் போன்ற பணிகளை சிறப்பாகக் கூறுவது.
   1) திருமுறைகள் 2) வேதங்கள் 3) ஆகமங்கள் 4) மனையடி சாஸ்திரம்.

06. பின்வருவனவற்றில் சுக்கிரவாரம் என அழைக்கப்படும் விரதம்
   1) செவ்வாய்க்கிழமை விரதம் 2) வியாழக்கிழமை விரதம்
   3) சனிக்கிழமை விரதம் 4) வெள்ளிக்கிழமை விரதம்

07. "மகாசங்கிராந்தி" என அழைக்கப்படும் பண்டிகை
   1) தீபாவளி 2) ஆடிப்பிறப்பு 3) தைப்பொங்கல் 4) புதுவருடப்பிறப்பு.

08. பஞ்சபுராணம் ஓதும் போது நான்காவதாக ஓதப்படுவது.
   1) தேவாரம் 2) திருப்பல்லாண்டு 3) திருவிசைப்பா 4) பெரியபுராணம்

1386

09. காரைக்கால் அம்மையாரின் இளமைப் பெயர்.
1) திலகவதியார் 2) பரவையார் 3) மானி 4) புனிதவதியார்.

10. பெரியபுராணம் இடம்பெறும் திருமுறை.
1) மூன்று 2) எட்டு 3) பத்து 4) பன்னிரண்டு.

11. திருக்கோணேஸ்வர ஆலய இறைவனின் பெயர்.
1) முன்னை நாதர் 2) திருக்கேதீச்சரநாதர்
3) நகுலேஸ்வரர் 4) நகுலேஸ்வரர்.

12. திருஞானசம்பந்தர் திருக்கேதீச்சரத்தின் மீது பாடிய தேவாரப் பாடல்.
1) நிரைகழலரவம் ................ 2) மாதர்ப்பிறைக் கண்ணி................
3) விருது குன்றமா ................ 4) நங்கடம்பனைப் பெற்றவள் .................

13. தேர் வடிவமாகச் சக்கரங்களோடு அமைக்கப்பட்ட திருக்கோயில்.
1) திருக்கோணேச்சரம் 2) சிதம்பரம்
3) திருவையாறு 4) மேலைக்கடம்பூர்

14. திருமுறைப் பாடல்கள் ஓதுவதற்கு முன்பும் ஓதிய பின்பும் சொல்ல வேண்டியது.
1) நமசிவாய 2) எல்லோரும் வாழ்க
3) ஓம் சாந்தி 4) திருச்சிற்றம்பலம்

15. திருநாவுக்கரசரின் குருபூசைத் தினம்.
1) வைகாசி மூலம் 2) சித்திரைச்சதயம்
3) ஆனிமகம் 4) ஆடிச்சுவாதி.

16. ஆலய வழிபாட்டில் மும்முறை கைதட்டி சிவதரிசன பலனைத் தரும்படி இறுதியாக வழிபடும் கடவுள்.
1) வைரவர் 2) சிவபெருமான் 3) சண்டேசுவரர் 4) அம்மன்.

17. சேந்தனார் திருப்பல்லாண்டு பாடி தேரினை ஓடச் செய்த தலம்.
1) திருமழபாடி 2) திருக்கேதீஸ்வரம்
3) சிதம்பரம் 4) திருத்தோணிபுரம்

18. திருஞானசம்பந்தர் பாண்டிய மன்னனின் வெப்பு நோயினைத் தணிக்க பாடிய பதிகம்.
1) தளிர் இளவளரொளி.......... 2) மந்திரமாவது நீறு.............
3) இடரினும் தளரினும்............ 4) சதுரம் மறை .................

19. “தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் ...........” எனப் பாடிய நாயனார்.
1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
3) சுந்தரமூர்த்தி நாயனார் 4) மாணிக்கவாசகர்

20. பிரித்தானிய அரசினால் “நைட்” பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.
1) சேர். பொன் அருணாசலம் 2) சுவாமி விபுலானந்தர்
3) சேர். பொன் இராமநாதன் 4) இந்துபோட். சு. இராசரத்தினம்

(2X20=40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதிப் பாடியவர் பெயர், தலம் என்பவற்றையும் தருக.

1) "பொன்னார் மேனியனே ……………"

2) "முத்தி நெறி அறியாத ……………..."

3) "நத்தார் படை ……………"

4) "வேதநெறி தழைத்தோங்க ……………"

5) "குழலொலி யாழொலி …………………" (7+½+½X=16 புள்ளிகள்)

02. "நன்றி மறப்ப துநன்றன்று".

1) நன்றி மறவாப் பண்பினால் உயர்வடைந்தவர்கள் இருவரின் பெயர்களை எழுதுக?
2) நன்றி மறவாப் பண்பினை உணர்த்தும் கூற்றுக்கள் 3 தருக?
3) நீர் நற்பண்புகளைக் கடைப்பிடிப்பதால் பெற்ற நன்மைகள் 03 தருக?
4) "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை …………." எனக் கூறியவர் யார்?

(2+3+3+3=11 புள்ளிகள்)

03. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

1) ஆலயம் என்பதன் பொருள் யாது?
2) ஆலய வழிபாட்டிற்கு கொண்டு செல்லும் பூசைப் பொருட்கள் எவை?
3) ஆலயத்தில் நீர் செய்யும் சரியைத் தொண்டுகள் 03 தருக?
4) ஆலய வழிபாட்டினால் நீர் பெற்ற பயன்கள் 03 எழுதுக? (2+3+3+3=11 புள்ளிகள்)

04. "விரதங்களும் பண்டிகைகளும் மனித வாழ்வை நெறிப்படுத்துகின்றன"

1) "விரதம்" என்பதற்கு ஆறுமுகநாவலர் குறிப்பிடும் கருத்தினை எழுதுக?
2) நீங்கள் கொண்டாடும் பண்டிகைகள் 03 எழுதுக?
3) வருட விரதங்கள் 03 எழுதுக?
4) விரதம் அனுட்டிப்பதன் மூலம் நாம் பெறும் பயன்கள் 03 எழுதுக?

(2+3+3+3=11 புள்ளிகள்)

05. "தினமும் திருமுறை ஓதுவாய் மனமே"

1) திருமுறை என்பதன் பொருள் யாது?
2) முதல் ஏழு திருமுறைகளையும் அருளியவர்கள் யாவர்? எவ்வாறு அழைப்பர்?
3) திருமுறைப் பாடல்களின் சிறப்பியல்புகள் 03 தருக?
4) திருமுறைகளை ஓதுவதால் நீர் பெறும் பயன்கள் மூன்று எழுதுக?

(2+3+3+3=11 புள்ளிகள்)

06. "சைவத்தின் காவலர்கள் சமயகுரவர்கள்"

1) சமய குரவர்கள் யாவர்?

2) சம்பந்தரால் பாடப்பெற்ற ஈழத்துச் சிவாலயங்கள் எவை?

3) திருஞானசம்பந்தர் நிகழ்த்திய அற்புதங்கள் மூன்றினை எழுதுக?

4) திருஞானசம்பந்தருடன் இணைந்து சமய சமூகப் பணி ஆற்றிய நாயனார் யார்? அவை யாவை?

(2+3+3+3=11 புள்ளிகள்)

07. "இறைவனால் 'அம்மையே' என அழைக்கப்பட்டவர் காரைக்கால் அம்மையார்."

1) காரைக்கால் அம்மையார் பிறந்த இடம் எது? தந்தை கணவரின் பெயர் யாது?

2) இவரிடம் இளமையில் காணப்பட்ட நற்பண்புகள் யாவை?

3) இறைவனிடம் இவர் விரும்பி பெற்ற வடிவம் யாது? அவ்வடிவத்துடன் எங்கே சென்றார்?

4) இவர் பாடிய பதிகங்கள் மூன்று தருக?

(2+3+3+3=11 புள்ளிகள்)

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன..

## கட்டண விபரங்கள்

தமிழ் Medium

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

English Medium

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457